# கல்மர நாவலும் பெண்ணியச் சித்தரிப்பும்

***முனைவர் வ. மாலிக்***
தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்
சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரி, திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7903

*கற்றதைத் திடமாக வெளிக்கொண்டு வருதல் என்பது இதன் உள்ளார்ந்த பொருள். ஆனால் எவ்வாறு? எப்படி? எங்கு? எந்த? நேரங்களில் வெளிப்படுத்துதல் என்பது இதன் உள்ளிருக்கும் கேள்வி. "இவன் படிச்சவனம்மா" அதற்குத் தக்கபடி நடத்து கொள்கிறான் என்ற ஒரு சொல்லாடலை நாம் கேட்டிருக்கிறோம். படித்துப் பல்வேறு பட்டம் பெற்றவர் களா? உயர் அதிகாரிகளா? விஞ்ஞானிகளா? என்று யோசித்தால் சரியான பதில் கிடைக்காது. இதையும் தாண்டி "ஆயக் கலைகள் அறுபத்து நான்கும்" அறிந்தவன் நான் என்று பேசிக் கொண்டு இருப்பவர் களை நாம் பார் த்திருக்கிறோம். ஆனால் இவர் களால் எந்தப் பயனும் கிட்டுவதில்லை என்பதை வரலாற்றின் பல பக்கங்கள் நம்மைச் சிந்திக்க வைத்துள்ளது.*

*மேலோட்டமாகப் பார் க்கும் போது 'கற்க' என்றால் கற்றுக் கொள்ளுதல் என்ற பொருள் வெளிப்படும், கற்றதை வெளிக்கொணர்ந்து அது சமூகப் பயனாக மாறும் போதுதான் முழுமையடைகிறது. எப்போது சமூகப் பயனாக மாறும் என்பதை இக்கால இலக்கியமான 'நாவல்கள்' பல பதிவுகளாக நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. நாவல் இலக்கியம் பெரும்பாலும் சமூகம் சார் ந்த கருத்தாளுமையை மையமாகக் கொண்டுள்ளது. அதிலும் பெண் படைப்பாளிகள் குடும்பம் சார் ந்த படைப்புகளில் இருந்து விடுபட்டு இன்று சமூக சார்ந்த பயனுள்ள படைப்புகளைக் கொண்டுவருவதில் தங்களை முன்னெடுத்துச் செல்கின்றனர். தான் கற்றதைச் சமூகம் கற்க வேண்டும், அதே நேரத்தில் குடும்பத்தையும் கட்டுக் கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என்ற மேலோங்கிய எண்ணத்தில் உள்ளன. இந்தச் சிந்தனையை நாவலாசிரியர் திலகவதி, தன்னுடைய 'கல்மரம்' நாவலில் பதிவு செய்துள்ளார் .*

*கட்டடத் தொழிலாளர் களுக்குரிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து, முனைவர் பட்ட ஆய்வு மேற்கொள்ளும் மாணவியான சுசீலா இந்நாவலில் தலைமைக் கதாபாத்திரம் ஆவார். சுசீலா தன்னுடைய ஆராய்ச்சியைத் தொடங்கிய போது துயரங்களுடன் கூடிய பல்வேறு பிரச்சினைகளைக் கண்டறிந்தாள். அவற்றை ஆய்வேடாக்கிப் பட்டம் பெறுவது என்ற நிலையிலிருந்து மாறி அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தன்னையே ஈடுபடுத்திக் கொள்கிறாள். இப்பிரச்சினையைத் தீர்க்க அதற்கான திட்டப்பணியை ஓசைபடாமல் மேற்கொள்கிறாள்.*

கட்டுமானப் பணியில் கடினமான அடிப்படைப் பணிகளை சித்தாள்களான, பெண் தொழிலாளிகளின் பொருளாதாரச் சிக்கலைத் தீர்க்க உரியவகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எண்ணுகிறாள்.

கட்டுமானத் தொழில் உரிமையாளர்களிடமிருந்து வருகின்றதுன்பங்கள்ஒருபுறம்இருப்பினும், உடன் பணிபுரியும் ஆண் தொழிலாளர்களிடமிருந்து இன்னல்கள் மறுபுறம், குறிப்பாகக் 'கொத்தனார்கள் என்றழைக்கப்படுகின்ற இரண்டொரு ஆண் தொழிலாளர்கள் பணிக்கு வரவில்லை என்றால், சித்தாளாகியப் பெண் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் இவர்களுடைய அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

'கட்டடத் தொழிலாளர் பிரச்சினைகளைக் குறித்த ஆய்வு" செய்யப்போனவளான சுசீலா அவர்களில் ஒருத்தியாகவே மாறிப்போனாள். என்ன விசித்திரம்? பொதுவாகத் தொழிலாளர்களால் செய்யப்படும் பொருள்கள். விற்பனைக்குப் போகும் தொழிலாளர்கள் தங்களுக்கு என நியமிக்கப்பட்ட அதே இடத்தில் இருந்து உழைப்பார்கள். இந்தத் தொழிலிலோ செய்யப்பட்ட பொருள்கள் நிலைப்பட்டு நிற்கத் தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து கொண்டே இருந்தார்கள். உயர்ந்து நிற்கிற எந்தக் கட்டடமும் தன் இருப்புக்கு முதல் போட்டவன் பெயரைச் சொன்னதே அல்லாமல் தன்னை உண்டாக்கியவனின் பெயரைச் சொல்லவே இல்லை". இந்த உண்மைகள் சுசீலாவை ஈர்த்தன. அவர்களின் பிரச்சினைகளை எழுதிப் பட்டம் பெறுவதை விட அந்தப் பிரச்சினைகளை அவர்களோடு பகிர்ந்து கொள்வதிலும் அவற்றைத் தீர்ப்பதில் பங்கெடுத்துக் கொள்வதிலும் தான் தனக்குச் சந்தோசும் இருக்கிறது என்று அவளுக்குப்பட்டது" (கல்மரம் பக்கம் 61)

இப்புதினம் ஒரு குடும்பக் கதையாகத் தொடங்குகிறது. ஆதிலெஷ்மி என்னும் பெண்ணின் குடும்பத்தை மையமாகக் கொண்டு அவருடைய மகன் "மகன்கள் பற்றிக் கூறும் செய்திகள்" யதார் த்தமான நிகழ்வுகள் என்றாலும் இவற்றின் இடையே பேசப்படும் பொருளாதாரச் சிக்கல்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். திருமணம் என்று வருகின்ற பொழுது ஆண்களில் தொழில்நிலை, பொருளீட்டல் ஆகியவை பற்றிச் சமூகத்தில் போலியான மிகைப்படுத்தல்கள் பேரளவில் நிலவுகின்றன. இந்த மிகைப்படுத்தல்களில் போதியக் கவனம் கொள்ளாததன் விளைவாகப் பல பெண்களின் வாழ்வு சிதைந்துவிடுகிறது. இப்படிப்பட்ட சிதைவைக் கன்னியம்மாள் என்ற பெண் மூலம் பதிவு செய்துள்ளார் ஆசிரியர். இதிலிருந்து மீட்டெடுத்துத் தன் வாழ்க்கையை எதிர் கொள்ள, மாற்றுப் பாதையை இவள் மேற்கொள்கிறாள். அந்த மாற்றுப் பாதை என்னவெனில் சித்தாள் பணிதான், இதைப் போல் மற்றொரு பாத் திரமான ராகினி தவறிழைத்த கணவனைத் திருத்தி, தானும் பணிக்குச் செல்கிறாள். வாழ்க்கையை வளமானதாக மாற்ற முனைகிறாள்.

விவசாயம் போன்றப் புர் வீகத் தொழில் நசிந்துவிட்ட இன்றையச் சமூகச் சூழலில் கீழ், நடுத்தர, அடித்தள மக்களுக்கு வேலை வாய்ப்பு என்பது சவாலாக உள்ளது. மாற்றுத்தொழில் செய்வதற்குப் படிப்பு, பணம் இரண்டும் அவசியம் தேவைப்படுகிறது. இரண்டும் இல்லாத சூழலில் கட்டடத் தொழில் ஒன்றே அரிய வாய்ப்பாக இன்றைய சூழலில் அமைந்துள்ளது. எனினும் இந்தத் தொழில் உயிருக்கும் அதிக ஆபத்து உள்ளதாக உள்ளன. இருந்தபோதிலும் அடுக்குமாடிக் குடியிருப்பு, கட்டுமானப் பணிகள் நகர்ப்புறங்களில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதால், அடிநிலை மக்கள் இதில் தங்களை அதிக அளவில் ஈடுபடுத்திக் கொள்கின்றனர். அடிப்படை வசதிகள் பற்றியெல்லாம் இவர்கள் கவலைப்படுவதில்லை என்பதை ஆசிரியர் கீழ்க்கண்டாவாறு பதிவு செய்துள்ளார் .

**"அந்தக் கூட்டத்தின் பின்னால் ஆறு குடிசைகள் கட்டப்பட்டுவிட்டன. ஆறு குடிசைகளுக்குள்ளும் ஆறு குடும்பங்கள் குடிசைகளுக்கு வெளியே கல் அடுப்புகள், சட்டி, பானைகள், தட்டு முட்டுகள் என்று சாமான்கள் நிறைந்து விட்டன"**

**(க.ம. 154)**

இப்படியேதான்இவர்களதுவாழ்வியல் முறை தொடர் கிறது. குறைந்த தொகை தான் ஊதியமாகவும் வழங்கப்படுகிறது. இதில் இடைத்தரகரும் லாபம் சம்பாதிக்கின்றனர். கட்டட வேலைக்கு வருபவர்களின் நிலையை கீழ்க்கண்ட பதிவுமூலம் அறியலாம்.

'கட்டடவேலைக்குவர்றவங்களெல்லாருமே ஏழப்பட்டவங்க அன்னன்னிக்கு உழைச்சு அன்னிக்குச் செலவுக்கு வழி பண்ணிக்கிட்டு மானமா பொழைச்சாப் போதும்ன்னு நெனக்கறவங்க' அன்னாடம் சம்பாதிச்சு அன்னாடம் வயித்த ரொப்பிக் கறவங்க தீடீர்ன்னு எதுனா ஆயிட்டா என்னா பண்ணவாங்க' (க.ம. 156)

எதுவுமே பண்ண முடியாது. அதிலும் இந்த நாவலில் விளிம்பு நிலையிலுள்ள மக்களின் வறுமை மற்றும் பெண்களின் நிலை குறித்தும் அவர் கள் அவலநிலை குறித்தும் பரிதாபமாக உள்ளது என்பதை ஆசிரியர் இவ்வாறு வெளிப்படுத்துகிறார். சாந்துச்சட்டி விழுந்து கம்சலை என்ற பெண்ணுக்குக் காலில் இரண்டு விரல் போய்விட்டது. இந்த நிலையிலும் அவள் திரும்பவும் வேலைக்கு வருகிறாள். காரணம் வறுமைதான்.

'ஏங்கா வெரலுதானே போயிடுச்சி வெரலு இல்லன்னா என்ன, காலாபோயிடுச்சு நம்மள மாதிரி ஓடி உழைப்பவங்களுக்கு கையும், காலும் தான் சொத்துன்னு அம்மா சொல்லும்' என்றாள். (159)

கட்டுமானத் தொழிலில் விளிம்பு நிலை மக்களின் உழைப்பைச் சுரண்டும் தொழிலாகவே இன்று வரை இருந்து வருகிறது. மேலும் இதில் பெண்களை அதிக அளவில் அனுமதிப்பற்குக் காரணம் குறைந்த ஊதியத்தில் வேலை வாங்கிக் கொள்ளலாம் என்பதுதான் என்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார். இன்றையச் சூழலில் கொத்தனார் பணி என்பது ஆண்களால் மட்டும் செய்யப்படுவதாகக் கருத்து வருகிறது. இத்தொழில் சார் ந்த துணைப்பணி அனைத்தும் பெண்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் கொத்தனார் பணியைச் செய்ய இயலாத நிலையில் பெண்கள் உள்ளனர். இந்த நிலையைப் போக்கவே சுசீலாதான் அறிந்ததை ராகினி, காவேரி போன்ற மற்ற பெண்களிடம் பதிவு செய்து அவர் களைக் கொத்தனாராக ஆக்கும் பணியை மேற்கொள்கிறாள்.

- நாமயெல்லாம் கடைசிவர பொம்பளைங்கறவ சித்தாள் வேலைக்குத்தான் நினைச்சி கிட்டுருக்கோம் பொப்பளங்க கொத்தனார் கூட ஆவலாம்ல (ப-173)
- மாநிலச் சங்கத்தில் போன அஞ்சு வருசுமாகவே பொண்ணுங்களுக்குக் கொத்தனார் ட்ரெய்னிங் கொடுக்றாங்க பத்து மாசப் பயிற்சி. இந்தப் பத்து மாசத்துக்கும் பணம் தர் ராங்க (ப-174) என்றாள் சுசீலா.

சுசிலாவின் இந்த எடுத்துரைப்பின் மூலம் பெண்களே கொத்தனார் களாவது என்ற புதிய பரிணாமமும் சிந்தனைத் தெளிவும் வெளிப்படுகிறது. அதுமட்டுல்லாது பெண் தொழிலாளர் களின் பணியின்மையும், பொருளிழப்பையும் தவிர்க்க முடியும் எனத் தெளிவுப்படுத்தப்படுகிறது. பெண்கள் எல்லா வகைப் பணிகளையும் திறம்பட மேற்கொண்டு வருகின்ற சூழலில் இதையும் திறம்பட மேற்கொள்ள முடியும் என்ற கருத்து வலிமையாகப் பேசப்படுகிறது. கற்றவர்கள், மற்றவர்களிடம் நம்பிக்கை என்னும் கல்வியை ஊட்டவேண்டும். இதைத்தான் சுசிலா செய்துள்ளார். இந்த நம்பிக்கை என்பதை அம்சப்பிரியா என்ற கவிஞர் கீழ்க்கண்ட கவிதை மூலம் கூறுகிறார்.

**"முதலில்**
**புத்தொட்டியை வரைந்தாள்**
**அதற்குள் மரத்தை நாட்டினாள்**
**நேரிடையாக மரம் வளர் க்காது**
**என்று அம்மா சொல்ல**
**அதெல்லாம் துளிர் க்குமென**
**அடம் பிடித்தாள்**
**சிறுமி அகஸ்தியா**
**அதற்காகவே**
**தான் துளிர் க்கத்**
**தவமிருக்கத் துவக்கிற்று**
**காகிதத்தில் வேர் பிடித்திருந்த மரம்"**

**(க. அம்சப்பிரியா)**

நம்பிக்கை சாதனையாக மாறுகிறது. சாதனைகளைச் சமூகத்தில் பெண் தனித்து நின்று சாதிக்க முடியாது. இயக்கமாகவே சாதிக்க இயலும் அதன் பொருட்டுப் பெண்கள் தங்களுக்குள் ஒன்றுபட்ட இயக்கமாக மாறுவது அவசியம் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டுள்ளது. எதையும் முறையான பயிற்சியாலும் தொடர்ச்சியான அனுபவத்தாலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை, சுசிலாவின் வாயிலாக ஊட்டப்படுகிறது. அனுபவமே சரியான கற்றல் என்பதே 'கவிஞர் கல்யாண்ஜி' கீழ்க்கண்ட கவிதையில் உணர்த்துகிறார்.

**"எதிர் வரும் யாவரும் குரு என அறிவேன்**
**உதிர் இலை, உதிர் மலர் அவரிடம் பெறுவேன்**
**புதிரதும் விடையதும் ஒன்றெனப் புரிவேன்**
**இதுவர, அது செல்லும் எனும் இடம் தெரிவேன்,**
**அறிவதும் அமைவதும் மனமென உணர் வேன்**
**எதிர் வான் எதிர் கொள்ளும் இசை வினை அடைவேன்"**

என்கிறார். வாழ்வின் அனுபவமே முறையாகக் கற்றுக் கொள்ளும் கல்வி. இதனை இந்நாவலில் வரும் பெண்கள் மூலம் நாம் அறியலாம்.

அடிப்படையான கல்வியறிவும் தொழில் குறித்தப் பயிற்சியும் வழங்கப்பட்டதன் மூலம் 'பெண் கொத்தனார்களை' உருவாக்க முடிந்தது. இப்பழமையான வளர்ச்சிகள் இவர்கள் வாழ்க்கை குறித்த நம்பிக்கைளை உண்டாக்குவதும் வாழ்க்கை குறித்த நம்பிக்கையும், பொருளாதாரச் சிக்கலையும் உருவாக்குவதுதான் நல்ல படிப்பினை என்பதைச் சுசிலா, ராகினி, போன்ற பெண்கள் மூலம் நாம் அறியலாம்.

இந்தக் கட்டுரை, கட்டடத் தொழிலாளர்களை மையமாக வைத்து அமைந்திருந்தாலும் அதில் சுசிலாவின் ஆழமான எடுத்துரைப்புதான் முக்கியமானதாகும். இந்த எடுத்துரைப்பு அடிப்படையில் பெண்ணின் பொருளாதார மற்றும் பண்பாட்டு விடுதலை, பெண்ணுக்கானச் சுயச்சார்பு, வாழ்வின் மீதான நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டுள்ளது. கற்ற பெண்கள் பல்வேறு துறையில் தமக்கு ஏற்படும் உரிமைப் பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளில் இருந்து விடுபட்டு மாற்றுப் பாதைகள் குறித்துச் சிந்தித்துச் செயல்படத் தொடங்க வேண்டும்.

ஜனநாயகத்தை உற்று நோக்கும் போது இந்நாவல் குடும்பக் கதையாகத் தொடங்கப்பட்டுச் சமூக இருப்பாக மாறுகிறது. இதற்கு முனைவர் பட்டம் பெற விரும்பும் சுசிலாதான் காரணம். ஏதோ ஓர் ஆராய்ச்சி செய்துவிட்டு முனைவர் பட்டம் பெறும் ஆராய்ச்சியாளருக்குச் சுசிலாவின் பயனுள்ள ஆராய்ச்சி ஒரு முன்னுதாரணமாகும். முனைவர் பட்டம் இன்றைய சூழலில் எளிதாகக் கிடைத்து விடுகிறது. இது ஒரு ஏட்டுச்சுரைக்காய் போன்று உள்ளது. இந்தப் போக்கினைச் சுசிலா போன்ற மாணவர்கள் மாற்றியமைக்க வேண்டும். முறையான ஆய்வு ஆராய்ச்சிகள் ஒரு சமூகத்தையே மாற்றும் என்பதை இந்தப் புதினம் பதிவு செய்கிறது. பல பட்டங்கள் பெற்றுப் பெயரை அலங்கரிப்பதைவிட,

பயனுள்ள கல்வியே கசடை அகற்றும். இதைத்தான் வள்ளுவர் 'கசடற' என்றார் . கல்வியின் மூலம் அதாவது கற்றதன் மூலம் சகடு என்றால் கழிவு, அழுக்கு, தேக்கம், இன்னும் பிற இவற்றை நீக்குதல் வேண்டும். இதைத்தான் சுசீலா செய்துள்ளார் . இப்படி ஒரு திட்டம் இருக்கிறது என்பதையே சித்தாளாகியப் பெண் தொழிலாளிகள் அறியவில்லை. இதற்குத்தான் படித்தவர்கள் தேவைப்படுகிறார்கள்.

தான் கற்றதை, கற்றுக் கொடுப்பதன் மூலம்தான் தன்னுடைய படிப்பு முழு வெற்றி அடையும் என்ற எண்ணம் இன்றைய மாணவர்களுக்கு உருவாக வேண்டும். இதற்கு நாமும் சுசிலா போன்ற உண் மையான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு பயனுள்ள முனைவர் பட்டம் பெற வேண்டும்.

பெண்கள் எல்லா வகையிலும் முன்னேறி விட்டார்கள். ஆண்களை விஞ்சுமளவிற்கு வளர்ந்து நிற்கிறாள் என்பன போன்றச் சூழல் பரவலாகப் பேசப்பட்டாலும், இவை மேலெழுந்த நோக்கமுடைய கருத்துகளாகும்.

இந்தக் கருத்தைத்தான் சுசிலாவின் முனைவர்பட்டம் வெளிக்கொண்டு வர முயற்சி செய்து வெற்றியடைந்துள்ளது. குறிப்பிட்ட, சில பெண்ணின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பெண் முன்னேறி விட்டார் கள் என்று கூறுவது மடமை.

விளிம்பு நிலையிலுள்ள பெண்மக்களின் அவலநிலையைச் சுசிலாவின் ஆராய்ச்சி வெளிக்கொண்டு வந்து தீர் வு கூறியதைப் போல் முனைவர் பட்ட ஆராய்ச்சி மேற்கொள்ளும் அனைவரின் பார்வையும் இதுபோலப் பயனுள்ளதாக இருந்தால் மட்டுமே 'கற்க நிற்க அதற்குத் தக' என்ற வாசகத்தின் பொருள் முழுமையாக்கப்படும். வெற்றியும் பெற வேண்டும். அது மட்டுமன்று அதற்குத் தக என்ற ஒற்றைச் சொல்லில்தான் முழுப் பயனும் உள்ளது.

**பயன்படுத்தப்பட்ட நூல்**

1. திலவதியின் கல்மரம் - நாவல் (சாகித்ய அகாதெமி விருது பெற்றது)
2. தமிழ்நாவல்களில் பெண்ணியம்.